00193

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

Course Title and - Code : CYU3300- Basic Principles of Chemistry I
Academic Year : 2020/2021
Date: 18.12.2021 : Time: 9.30 m – 11.30 am

## பகுதி II

(பரிந்துரைக்கப்பட்ட காலம் 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்)

- இப்பகுதி ஆனது 3 கட்டமைப்பு கட்டுரை வினாக்களை கொண்டுள்ளது. அனைத்து மூன்று வினாக்களுக்குமான விடைகளை எழுதுங்கள்.

---

**01.**

**a)** (i) உருதபோர்ட்டின் α துணிக்கை சிதறல் பரிசோதனை மூலமாக பெறப்பட்ட மூன்று அவதானிப்புகளையும் சுருக்கமாக விளக்குக.

(ii) அவதானிப்புகளை அடிப்படையாக கொண்டு, அணுவின் கட்டமைப்பிற்கான உருதபோர்ட்டின் மாதிரியுருவை விளக்குக?

(iii) உருதபோர்ட்டின் மாதிரியுருவானது அணுவின் கட்டமைப்பிற்கு ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதனை விளக்குக?

**(15 புள்ளிகள்)**

**b)** (i) ஒரு $F_2$ மூலக்கூறின் பிணைப்புபிரிகை ஆனது ஒரு தனி போட்டோனின் அகத்துறிஞ்சலின் மூலமாக நடைபெறுகிறது என கருதுவோமாயின், அப் போட்டோனின் அலைநீளம் யாதாக இருக்கும்? A) மீட்டர்களில், B) நனோமீட்டர்களில். ($F_2$ மூலக்கூறின் பிணைப்புபிரிகை சக்தி 157 kJ/mol)

(ii) A. ரிட்ஜ்பேர்க்கின் சமன்பாட்டினை எழுதி அதிலுள்ள அனைத்து பதங்களையும் இனம் காண்க.

B. ஐதரசன் நிறமாலையின், பாமர் தொடரின் 656 nm இல் காணப்படும் கோடு ஆனது, $n_1$ ஓபிட்டலில் இருந்து $n_2$ ஓபிட்டலிற்கான தாண்டலுடன் தொடர்புடையது. ரிட்ஜ்பேர்க்கின் மாறிலி, $R = 1.097\times10^{7}\ m^{-1}$

- $n_1$ இன் பெறுமானம் யாது?
- ரிட்ஜ்பேர்க்கின் சமன்பாட்டினை பயன்படுத்தி $n_2$ இன் பெறுமானத்தை கணிக்குக.
- தொடர் எல்லையின் அலைநீளத்தை கணக்கிடும் போது, $n_1$ மற்றும் $n_2$ இற்கு சாத்தியமான பெறுமானங்கள் யாவை?

**(60 புள்ளிகள்)**

**c)** (i) 3p இன் மூன்று இலத்திரன்களிற்கு பொருத்தமான சக்திச்சொட்டெண்களை எழுதுக.

(ii) மங்கனீசின் (அணுவெண் = 25) இலத்திரன் நிலையமைப்பிற்கான சுருக்க கை குறியீட்டை எழுதுக.

(iii) பொட்டாசியத்தின் (அணுவெண் = 19) 4s இலத்திரனின் $Z_{eff}$ பெறுமானத்தை கணிக்குக.

(iv) சடத்துவச்சோடி விளைவு என்பதால் விளங்குவது யாது? விளக்குக.

**(25 புள்ளிகள்)**

**02.**

**a)** (i) சாலக சக்தி எனும் பதத்தினை வரையறுக்க

(ii) CsCl(s) இன் தோன்றலிற்கான முழுமையாக பெயரிடப்பட்ட போர்ன்-ஹேபர் சக்கரத்தினை வரைக.

(iii) சக்கரத்திலுள்ள சக்திப் பதங்களை பயன்படுத்தி CsCl(s) க்குரிய சாலக சக்தியிற்கான வெளிப்பாட்டை எழுதுக.

**(25 புள்ளிகள்)**

00193

b) (i) $N_2$ இனுடைய மூலக்கூற்று ஒபிற்றல் சக்தி வரைப்படத்தை வரைக.
   (ii) $O_2$ இனுடைய மூலக்கூற்று ஒபிற்றல் இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.
   (iii) $N_2$ மற்றும் $O_2$ ஆகியவற்றின் பிணைப்பு வரிசைகளை உய்த்தறிக
   (iv) $N_2$ மற்றும் $O_2$ ஆகியவற்றின் காந்த இயல்புகள் பற்றி விபரிக்க.

**(50 புள்ளிகள்)**

c) (i) நைத்திரேற்று அயனுக்குரிய பரிவுக்கட்டமைப்புக்களை வரைக. அத்துடன் இவ் அயன் ஆனது காபனேற்று அயனுடன் சம இலத்திரனுக்குரியது என்பதனை காட்டுக.
   (ii) முனைவுள்ள பங்கீட்டுவலுப் பிணைப்பு என்பதின் மூலம் யாது விளங்கப்படுகின்றது என்பதனை பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

**(25 புள்ளிகள்)**

**03.** (a),(b), (c) ஆகிய பகுதிகளில் யாதாயினும் இரண்டிற்கு (02) விடை தருக.

**a)** பொருத்தமான சோதனைப் பொருட்கள், நிபந்தனைகள், இடைநிலைகளின் கட்டமைப்புக்கள், மற்றும் விளைவுகளின் கட்டமைப்புக்கள் ஆகியவற்றை தருவதன் மூலம் பின்வரும் தாக்கங்களை பூர்த்தி செய்க.

(i) $BrCH_2-CH(Br)-CH_2-CH(OH)-CH_3 \xrightarrow{Q} CH_2=CH-CH_2-CH(OH)-CH_3 \xrightarrow[CH_2Cl_2]{PCC} R$

(ii) 


**(50 புள்ளிகள்)**

**b)** பின்வரும் ஒவ்வொரு தாக்கத்திற்குமான தொடக்க பொருட்களின் கட்டமைப்புகளை தருக.

(i) 


(ii) $W \xrightarrow[Hg^{2+}]{H^+/H_2O} CH_3CHO$

(iii) 


(iv) $Y \xrightarrow[2.\ Zn/H_2O]{1.\ O_3} CH_3CH_2CHO + CH_3-\overset{O}{\overset{\|}{C}}-CH_3$

(v) 


**(50 புள்ளிகள்)**

00193

**c)** பின்வரும் மாற்றீடுகளில் யாதாயினும் **இரண்டு** (02) மாற்றீடுகளை எவ்வாறு மேற்கொள்வது என காட்டுக.

(i) $CH_3-CBr_2-CH_3 \longrightarrow CH_3-C\equiv C-CH_2OH$

(ii) $C_2H_5-CH(OH)-CH_3 \longrightarrow C_2H_5-CH(CH_3)-CH(OH)-CH_3$

(iii)  $\longrightarrow OHC-CH_2-CH_2-CH(Br)-CHO$

**(50 புள்ளிகள்)**